முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் செருத்துணை நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

14.12.2018, வெள்ளிக்கிழமை

1. **சூட்சும பலம் கொண்ட ஞானியே**
**சுப்பனின் துணை கொண்ட தவசியே**
**மாட்சிமைபட மகாசக்தியாக வந்து**
**மண்ணுலகை ஆளும் அரங்கனே**

2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் ஒளி சூட்சும நூலை
வரங்களென **விளம்பி தேளின் திங்கள்**
**வளமுற எழுநான்கு திகதி புகர் வாரம்**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 28ம் நாள் 14.12.2018, வெள்ளிக்கிழமை)**

3. வாரமதில் செருத்துணை நாயனாரும்
வழங்கிடுவேன் உலகோர் நலம்பெற
சோரமிலா தொண்டர் படையை
சுத்தநெறி கொண்டு உருவாக்கி

4. உருவாக்கி தமிழகம் தொட்டு
உலகமெங்கும் மாற்றம் தர
குருவாக அவதாரம் புரிந்து
குறையிலா தருமபலம் கொண்டு

5. கொண்டுமே தொண்டு வளர்க்கும்
குவலயமே சீடர்கள் படைத்து
தொண்டு பெருக்கி கலியுகத்தில்
தீங்கில்லா சக்திபலம் கூடிட

6. கூடிட இன மத பேதமில்லா
கூட்டிணைவு கொண்ட தருமத்தை
தேடிவர தேசமெங்கும் கொள்கை
தேசிகா என பரப்பி அருளும்

7. அருளும் அரங்கனே தலைவனே
ஆறுமுகன் அவதார தேசிகனே
அருளும் பெரும்பேறும் கிட்டிட
அலையத் தேவையில்லை என மக்களை

8. மக்களை திங்கள் தோறும்
மகா பூசையாக முழுமதியில் அழைத்து
ஊக்கம் ஆக்கம் தரும் ராசனே
உயர் அரங்கனே உன் பலம்

9. உன் பலம் தரும தவபலம்
உலகம் உணர்ந்தாலே போதுமப்பா
துன்பம் எல்லாம் விலகி
தெய்வீக சக்தி துணை பெருகி

10. பெருகி உலகே அமைதி
பேரிடர் பிரச்சனை இல்லா
முருகன் தலைமைக்கு வரும்
முழுமை ஞான ஆட்சி மலரும்

11. மலரும் மக்களிடை விழிப்புணர்வு
மதம் சாதி இன வெறி அகற்றி
வளரும் சமத்துவ சமதர்ம ஆட்சி
வழுத்திய ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் செருத்துணை நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

சூட்சும பலம் கொண்ட மகா ஞானியே ஆறுமுக அரங்கனே சுப்பனாம் முருகப்பெருமானின் துணை கொண்ட மகா தவசியே அளவிலாத ஆற்றலுடனும் பெருமையுடனும் மகா சக்தியாக இவ்வுலகினில் வந்துதித்து இந்த உலகை ஞான ஆட்சி செய்கின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 28ம் நாள் 14.12.2018, வெள்ளிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே செருத்துணை நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் செருத்துணை நாயனார்.

குற்றமற்ற அற்புதமான தொண்டர் படைதனை தூய ஞானநெறிகள் மூலமாக உருவாக்கி தமிழகத்திலிருந்து துவங்கி உலகமெங்கும் மாற்றங்களை தந்தருள ஞான குருவாக அவதாரம் புரிந்து குறையின்றி பெருமளவில் தர்மங்கள் செய்து குறைவற்ற தருமபலங்களை பெற்று உலகமெங்கும் தொண்டினை பெருக்கி இந்த உலகம் முழுதும் சீடர்களை படைத்து தொண்டுகளை அதிகளவில் செய்து கலியுகத்தினில் தீங்குகள் ஏதும் இல்லாத வகையில் சக்தியை பெருக்கி தர்மபலம்தனை பெருக்கிட இனம், மதம் பேதமில்லாது ஒன்றிணைந்த தருமத்தை மக்களெல்லாம் நாடி வந்து தர்மங்களை தளராது செய்து அரங்கன் தருமத்தை தேசமெங்கும் பரப்புவதுடன் நாடெங்கும் தேசிகனே தலைவன் முருகப்பெருமானே ஆட்சி தலைவன் என்றே உலகமெங்கும் அரங்கனின் அறக்கொள்கைகளை பரப்பி வரவர, தேசிகனாரின் மகிமையை உலகமெங்கும் பரப்பி அருள் ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனே தலைவன், ஞானத்தலைவனே முருகப்பெருமானின் அவதார தேசிகனே அருள்கின்ற ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானத்தலைவனே அவதார தேசிகனே தாம் அருளும் பெரும்பேறும் கிட்டிட ஞானம் அடைவர்.

நாடெங்கும் முருகப்பெருமானின் வெளிப்பாடு விரைந்து வந்திடும். ஞானதேசிகனார் அரங்கனின் அருளும் கிடைக்கப் பெற்று மகிழ்வர். ஆதலினால் அரங்கனின் தொண்டர்களே, அவதார தேசிகனே மனமுவந்து அருளும் பெரும்பேறும் கிடைத்திடுமப்பா.

ஞானவழி செல்லும் தலைவன் அரங்கனே என ஏற்றுக் கொண்டு அரங்கன் அருளும் பெரும்பேறு கிடைத்திட மக்களே அலையத் தேவையில்லை எனக் கூறுகிறார்.

ஆதலினால் ஞானம் தேடி அலைகின்ற மக்களே உங்களது ஆன்மாவை பிடித்து நீங்கள் நலம் பெற வேண்டும் என உலக நலன் கருதி மாதந்தோறும் பௌர்ணமி சிறப்பு ஞானபூஜைகளை நடத்தி வருகின்றார். அத்தகைய மகா ஞான பூஜைகளிலே ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற மகா ஞானியே உமது பலம் தருமதவபலம் தனை உலக மக்கள் உணர்ந்தாலே போதுமப்பா.

தருமம் எல்லாம் விலகி தெய்வீக சக்திகளின் துணை பெருகி உலகமே அமைதியாக பேரிடர் பிரச்சனைகள் எல்லாம் முருகப்பெருமானின் தொண்டர்களுக்கு பிரச்சனை இல்லாததாலும் தெய்வீக சக்தி பெருகி உலகினில் பேரிடர் பிரச்சனை பெருகி இந்த உலகமே முருகப்பெருமானின் தலைமைக்கு கீழ்வரும். உலகினில் முருகப்பெருமானின் ஞானஆட்சி மலரும்.

மக்களிடையே விழிப்புணர்வு பெருகி சாதி, மதம், இனம் என அனைத்திலும் வேற்றுமை நீங்கி நட்புடன் விளங்கி இனவெறி அகற்றி நாடே உலகமே சுபிட்சமாக வளரும். உலகினில் சமத்துவ சமதர்ம ஆட்சி விரைந்து மலரும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் செருத்துணை நாயனார்.

–சுபம்–